# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 கார்த்திகை மாதம் 5ம் திகதி முதல் 11ம் திகதி வரை

*"அர்ச்சிஸ்டவர்களின் ஐக்கியபிரயோசனம்"*

01.புகழ்ச்சிக்கான அறிமுகம்

- பரிசுத்த திரித்துவமாம் இறைவனைப் நமஸ்கரிப்போம். முதலில் ஒருவர்….நாம் நமஸ்கரிப்போம் என்று கூறிய பின்பு பங்கு கொள்ளும் மக்கள் …….நான் நமஸ்கரிக்கின்றேன் என்று வெளிப்படுத்தவும்.
- புபுது பாடல் இல10 "தூய ஆவியானவரே வந்தருளும்….." (பாடலை பாடுவதற்கு முன்பு பாடலின் வார்த்தைகளுக்கு உங்கள் கவனத்தை செலுத்தியவாறு ஒரு சில நிமிடங்கள் அதை முன்கொண்டு தியானிப்பதற்கு உள்ளாக்கவும்.
- பின்பு தூய ஆவியானவரினுள் புகழ்சிக்கு, செபத்திற்கு, மக்களை அழைத்தவாறு பாடலை பாடி புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.
- புபுது பாடல் இல 377 'தூய ஆவியில் நிரம்புவோம்' பாடல் வரிகளை பகுதி பகுதியாக பாடியவாறு தூய ஆவியினுள் பாடல் புகழ்ச்சிக்கு, அந்நிய மொழியின் புகழ்ச்சிக்கு, தூய ஆவியானவரின் கனி–கொடை அனுபவிப்பதற்கு உள்ளாக்கவும். நாம் எமது புகழ்ச்சி செபத்தினுள் விண்ணக அனுபவத்தை ஓர் துளி அனுபவிப்போம்.

02.கடந்த ஐப்பசி மாதம் சங்க குடும்ப தின நற்செய்தியை முன்கொண்டு நீங்கள் பெற்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்க.

- சங்க குடும்ப தின நற்செய்தியை சுருக்கமாக ஞாபகப் படுத்தவும். (வார்த்தையின் ஊழியர்)

03.நாளுக்குரிய நற்செய்தி

- 1 தெசலோனிக்கர் 4:13-18 பகுதியை பொதுவில் வாசிக்கவும். நாம் கடந்து செல்கின்ற மாதம் கார்த்திகை மாதம் 'இறந்த ஆத்துமாக்களை' நினைவு கூறும் மாதமாகும்.
- சிறு குழுக்களாக பிரிந்து மீண்டும் அப் பகுதியை வாசித்து அதனைக் குறித்து சங்கமமாக்குவோம்.
- பின்னர் சிறு சங்கங்கள் சிலவற்றின் அனுபவங்களை பொதுவில் பகிர்ந்துகொள்வோம்.

04. "அர்ச்சிஸ்டவர்களின் ஐக்கியபிரயோசனம்"

i. கத்தோலிக்க மறைபோதகம் என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்ட கீழ் காணும் பகுதிக்கு எங்கள் கவனத்தை செலுத்துவோம்.

- "நம்மிடையே எவரும் தமக்கென்று வாழ்வதில்லை. தமக்கென்று இறப்பதும் இல்லை." (உரோமையர் 14:7) "ஓர் உறுப்பு துன்புற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து துன்புறும். ஓர் உறுப்பு பெருமை பெற்றால் அதனுடன் மற்ற எல்லா உறுப்புகளும் சேர்ந்து மகிழ்ச்சியுறும். நீங்கள் கிறிஸ்துவின் உடல் ஒவ்வொருவரும் அதன் தனித்தனி உறுப்புகள். (1 கொரிந்தியர் 12:26-27)
- "அன்பு தன்னலம் நாடாது." (1 கொரிந்தியர் 13:5) அர்ச்சிஸ்டவர்களின் ஐக்கியத்தை அடித்தளமாக்கி, உயிர்வாழ்கின்ற அல்லது இறந்த அனைவருடனும் இருக்கின்ற இந்த

ஐக்கியத்தினுள் அன்பை முன்கொண்டு நாம் செய்கின்ற மிகவும் சிறியசெயலாக இருந்தாலும் அனைவரது பிரயோசனத்திற்கு காரணமாக அமைகின்றது. அனைத்து பாவமும் சமூகமாக விபத்திற்கு உள்ளாக்கப்படுகின்றன.

- "ஒரே சபையை கட்டி எழுப்புகின்ற கிறிஸ்துநாதர் சகல விசுவாசிகளினதும் ,அதாவது இவ்வுலகில் தற்காலிகமாக பிரயாணிகளாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற (போராடும் சபை)/உத்தரிகின்ற ஸ்தலத்தில் தூய்மையாக்குகின்ற இறந்தவர்களினதும் (துன்புறும் சபை) /விண்ணக பாக்கியம் பெற்றவர்களாகிய (வெற்றிக்கொண்ட சபை) ஐக்கியத்தையும் நாம் விசுவசிக்கின்றோம். மேலும் இவ் ஐக்கியத்தின் காரணமாக, இறைவனும் அவருடைய புனிதர்களினதும் தயவு, கருணைஎமது கூக்குரலின் மீது செலுத்தப்படுகின்றது என்பது எமது விசுவாசமாகும்.

04. எமது பேரில் (சிறு குழுக்களில் பகிர்ந்து கொள்க)

- எம்முடன் வாழ்ந்து, இறந்த ஆன்மாக்களுக்காகஎம்மால் செய்யக் கூடியது என்ன? (அவர்களுக்காக வேண்டுதல், நடுநிலை வகித்தல், அவர்களை நினைவு கூர்ந்து தானம் கொடுத்தல், திருபலியினுள் செபத்தினுள் அவர்களை நினைவு கூர்ந்து செபித்தல்)
- "எமக்கு கிடைத்திருக்கின்ற அழைப்பு மரணத்திற்கு பின்பு விண்ணகத்திற்கு செல்வது மாத்திரமல்ல இவ்வுலக வாழ்வினுள் இறை அரசில் வாழ்வதற்கான அழைப்பாகும்." இதை குறித்து நீங்கள் விழிப்புற்று இருக்கின்றீர்களா?
- அவ்வாறான விண்ணக வாழ்வு வாழ்பவரினுள், குடும்பத்தினுள், சங்கத்தினுள் வெளிப்பட வேண்டிய இலட்சணம் என்ன?

05. இறுதிப் புகழ்ச்சி

- **"உலகின் மீது நன்மையை செய்தவாறு எனது விண்ணக வாழ்வை வாழ எனக்கு வேண்டும்"** (லிசியாவில் புனித தேரேசா)
- **"அழாதீர்கள் ஏன்றென்றால் எனது மரணத்திற்கு பின்பு நான் அதிகமாக உனக்கு தேவைப்படுவேன். எனது வாழ் நாளை விட அதிக வல்லமையுடன் அப்பொழுது நான் உங்களுக்கு துணை புரிவேன்"** (புனித டொமினிக்)

இச் செபங்களுக்கு தியானத்துடன் உள்ளாகுவோம். உரிமையாக்கிக் கொள்வோம்.

- புபுது பாடல் இல 201 "மாரணாத்த ாமாரணாத்தா...."